பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
17 03 2024 7 15
ஞாயிற்றுக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. மக்களவைத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி இன்று ஆந்திராவில் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றுகிறார்.

2. காங்கிரஸ் தலைமையிலான **Indi** கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பங்கேற்கும் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் இன்று மும்பையில் நடைபெற உள்ளது.

3. தேர்தல் நடத்தை விதிமுறைகளை கண்டிப்புடன் அமல்படுத்துமாறு தேர்தல் ஆணையம், மத்திய மாநில அரசு நிர்வாகங்களுக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

4. சோமாலிய கடற்பகுதியில் கப்பல்களை கடத்த முயன்ற கடற்கொள்ளையர்களின் சதியை இந்திய கடற்படை வெற்றிகரமாக முறியடித்தது.

5. புதுதில்லியில் நடைபெறும் சர்வதேச டென்னிஸ் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இன்று இந்தியாவின் ராம்குமார் ராமநாதன், சகநாட்டு வீரரான **Karan Singh**-ஐ எதிர்கொள்கிறார்.

---- *இனி விரிவான செய்திகள்* ---

<<<<>>>>

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி ஆந்திரப்பிரதேசமாநிலத்தில் இன்று தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்ற உள்ளார்.

**Palnadu** மாவட்டம் **Shilakaluripet** என்ற இடத்தில் தேசிய ஜனநாயகக் கூட்டணி ஏற்பாடு செய்துள்ள இந்தக் கூட்டத்தில் அம்மாநிலத்தில் பிஜேபி கூட்டணிக் கட்சியான தெலுங்கு தேச கட்சியின் தலைவர் திரு. சந்திரபாபு நாயுடு, ஜனசேனா கட்சித் தலைவர் திரு. பவன் கல்யாண் ஆகியோரும் கலந்துகொள்கிறார்கள்.

மக்களவைத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் ஆந்திர மாநிலத்தில் நடைபெறும் முதலாவது தேர்தல் பிரச்சாரக் கூட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

10 ஆண்டுகளுக்குப் பிறகு பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் தெலுங்கு தேசம் மீண்டும் இணைந்துள்ளது.

மக்களவைத் தேர்தலில் பிஜேபி, தெலுங்குதேசம், ஜனசேனா ஆகிய கட்சிகளுக்கிடையே நீண்ட பேச்சுவார்த்தைக்குப் பின்னர் தொகுதிப் பங்கீடு இறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பிஜேபி 6 மக்களவைத் தொகுதி மற்றும் 10 சட்டப்பேரவைத் தொகுதிகளிலும், தெலுங்குதேசம் 17 மக்களவைத் தொகுதிகளிலும், 144 சட்டப்பேரவைத் தொகுதிகளிலும் போட்டியிடுவதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டணியில் உள்ள ஜனசேனா கட்சிக்கு 2 மக்களவைத் தொகுதிகளும், 21 சட்டப்பேரவைத் தொகுதிகளிலும் ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் ஆளும் ஒய்.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சி 175 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கும், 25 மக்களவைத் தொகுதிகளுக்குமான வேட்பாளர் பட்டியலை வெளியிட்டுள்ளது.

<<<<>>>>

காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தி நடத்தி வரும் பாரத ஒற்றுமை நீதி யாத்திரை இன்று மும்பையில் நிறைவடைகிறது.

இதையொட்டி **Indi** கூட்டணி சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பொதுக்கூட்டத்தில் காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன் கார்கே, சமாஜ்வாதி கட்சித் தலைவர் திரு. அகிலேஷ் யாதவ், ராஷ்ட்ரிய ஜனதாதள தலைவர் திரு. தேஜஸ்வி யாதவ், திமுக தலைவர் திரு. மு.க. ஸ்டாலின் உள்ளிட்டோர் கலந்துகொண்டு உரையாற்ற உள்ளனர்.

முன்னதாக நேற்று திரு. ராகுல் காந்தியும், காங்கிரஸ் பொதுச் செயலாளர் திருமதி பிரியங்கா காந்தியும் மும்பையில் தமிழர்கள் அதிகமாக வசிக்கக்கூடிய தாராவி உட்பட பல்வேறு இடங்களில் திறந்த வாகனத்தில் சென்று பிரச்சாரம் செய்தனர்.

<<<<>>>>

தேர்தல் நடத்தை விதிமுறைகளை கண்டிப்புடன் அமல்படுத்துமாறு மாநில அரசு நிர்வாகங்களை தேர்தல் ஆணையம் கேட்டுக்கொண்டுள்ளது.

இதுதொடர்பாக தேர்தல் ஆணையம் மத்திய அரசின் அமைச்சரவைத் செயலர், மாநில மற்றும் யூனியன்பிரதேச தலைமைச் செயலாளர்களுக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

மக்களவைத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் 24 மணி நேரத்திற்குள் அரசு சுவர்கள் மற்றும் கட்டிடங்களில் எழுதப்பட்டுள்ள சுவர் எழுத்துக்கள் மற்றும் சுவரொட்டிகளை உடனடியாக அகற்றுமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

ரயில் நிலையங்கள், பேருந்து நிலையங்கள் போன்ற இடங்களில் எழுதப்பட்டுள்ள அரசியல் கட்சிகளின் சுவர் எழுத்துகளையும், அரசின் சாதனை குறித்த விளம்பரங்கள் இருந்தால் அவற்றையும் அகற்றுமாறு ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

தனியார் கட்டிடங்களில் அங்கீகரிக்கப்படாத அரசியல் கட்சிகள் விளம்பரம் செய்திருந்தால் அவையும் அகற்றப்படும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

அரசியல் கட்சி வேட்பாளர்கள் அல்லது தேர்தலுடன் தொடர்புடைய பிற நபர்கள் தேர்தல் பிரச்சாரம் மற்றும் இதர தேர்தல் பணிகளுக்காக அரசு வாகனத்தை பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும், இது உடனுக்குடன் அமலுக்கு வருவதாகவும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசின் சாதனைகளை விளக்கும் வகையில் மின்னணு மற்றும் அச்சு ஊடகங்களில் விளம்பரங்களை வெளியிடக்கூடாது என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

<<<<>>>>

தூத்துக்குடி மாவட்டத்தில் இளம் வாக்காளர்களை அதிக அளவில் தேர்தலில் பங்கேற்க செய்ய பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வாக்களிப்பதன் அவசியம் குறித்து கல்லூரி மாணவர்கள் பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

சோமாலிய கடற்பகுதியில் கப்பல்களை கடத்த முயன்ற கடற்கொள்ளையர்களின் சதியை இந்திய கடற்படை வெற்றிகரமாக முறியடித்தது.

சோமாலியாவை ஒட்டியுள்ள செங்கடல் பகுதியில் செல்லும் சரக்கு கப்பல்கள் மீது ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் தொடர்ச்சியாக தாக்குதல் நடத்தி வரும் நிலையில் மறுபுறம் கடற்கொள்ளையர்கள் சரக்குக் கப்பல்கள் மற்றும் மீன்பிடி கப்பல்களில் கொள்ளையடிப்பது அல்லது கடத்திச் செல்வது அடிக்கடி நிகழ்கிறது.

கடந்த வியாழக்கிழமை சோமாலியாவின் கிழக்கு கடற்கரைப் பகுதியில் **MV Ruyan** என்ற சரக்குக் கப்பல் சென்றுகொண்டிருந்தபோது அந்தக் கப்பலில் ஆயுதம் ஏந்திய கடற்கொள்ளையர்கள் இருப்பதை அறிந்த இந்திய கடற்படையினர் நடுக்கடலில் அந்தக் கப்பலை வழிமறித்தனர்.

அப்போது கடற்கொள்ளையர்கள் இந்திய கடற்படையினர் மீது தாக்குதல் நடத்தியபோது தற்காப்புக்காக சர்வதேச சட்டத்தின்படி இந்திய கடற்படையினர் பதில் தாக்குதல் நடத்தினர்.

இதையடுத்து அந்த சரக்குக் கப்பலில் இருந்த கடற்கொள்ளையர்கள் கைது செய்யப்பட்டதை அடுத்து கப்பலை கடத்தும் முயற்சி வெற்றிகரமாக முறியடிக்கப்பட்டதாக இந்திய கடற்படை தெரிவித்துள்ளது.

அந்தக் கப்பலில் இருந்த 17 பணியாளர்களும் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

35 கடற்கொள்ளையர்கள் இந்திய கடற்படையிடம் சரணடைந்தனர்.

<<<<>>>>

கடற்படையின் முன்னாள் தலைவர் அட்மிரல் லட்சுமி நாராயண் ராம்தாஸ் நேற்று செகந்தராபாதில் காலமானார்.

இந்திய கடற்படைக்கு 1990ஆம் ஆண்டு முதல் 1993ஆம் ஆண்டு வரை தலைவராக இருந்த அவர், 1971ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிரான போரின்போது புதிதாக உருவாக்கப்பட்ட கிழக்கு மண்டல கடற்படையின் தலைமை அதிகாரியாக பணியாற்றினார்.

பங்களாதேஷ் உருவாவதற்கு முன்பிருந்த கிழக்கு பாகிஸ்தானில் இருந்து வெளியேறிய 93 ஆயிரம் பாகிஸ்தான் படையினரை சரணடைய செய்ததில் அட்மிரல் ராம்தாஸ் தலைமையிலான கடற்படை முக்கியப் பங்காற்றியது குறிப்பிடத்தக்கது.

<<<<>>>>

தேசிய ஷெட்யூல்டு வகுப்பு மற்றும் பழங்குடியினர் ஆணையத்தின் முன்னாள் உறுப்பினரும், பிரபல புத்தமதத் துறவியுமான லம்பா லப்ஸாங் நேற்று புதுதில்லியில் உள்ள அவரது இல்லத்தில் காலமானார். அவருக்கு வயது 94.

அவரது மறைவுக்கு பல்வேறு தலைவர்களும், பல்வேறு மதங்களைச் சேர்ந்த தலைவர்களும் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

<<<<>>>>

புதுதில்லியில் நடைபெறும் சர்வதேச டென்னிஸ் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இன்று இந்தியாவின் ராம்குமார் ராமநாதன், சகநாட்டு வீரரான **Karan Singh**-ஐ எதிர்கொள்கிறார்.

<<<<>>>>

ப்ரீமியர் லீக் மகளிர் கிரிக்கெட் இறுதி ஆட்டத்தில் தில்லி அணி – பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

இந்தப் போட்டி இன்றிரவு 7.30 மணிக்கு தில்லியில் தொடங்குகிறது.

<<<<>>>>

ஆல் இங்கிலாந்து பேட்மிட்டன் சாம்பியன் போட்டியில் ஆடவர் ஒற்றையர் பிரிவு அரை இறுதியில் இந்தியாவின் லக்ஷயா சென் தோல்வியடைந்தார்.

நேற்று நடைபெற்ற இப்போட்டியில் லக்ஷயா சென், 12-21, 21-10, 15-21 என்ற செட் கணக்கில் இந்தோனேஷியாவின் ஜோனதன் கிறிஸ்டியிடம் தோல்வியடைந்தார்.

முன்னதாக இந்தோனேஷியாவின் நட்சத்திர வீரர் ஆண்டனி ஜின்டிங் - பிரான்ஸ் வீரர் கிறிஸ்டோ பாபோவை வென்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

<<<<>>>>

சென்னையில் நடைபெற்று வரும் வாலிபால் லீக் போட்டியில் நேற்று பெங்களூரு அணி மும்பை அணியை 15-13, 16-14, 15-10 என்ற செட் கணக்கில் தோற்கடித்தது.

இன்று மாலை நடைபெறும் போட்டியில் மும்பை அணி - தில்லி அணியையும், மற்றொரு போட்டியில் கோழிக்கோடு அணி – அகமதாபாத் அணியையும் எதிர்கொள்கின்றன.

இன்றுடன் சூப்பர் சுற்று ஆட்டங்கள் நிறைவடைகின்றன.

இதில் முதலிடத்தைப் பிடிக்கும் அணி இறுதிப் போட்டிக்கு நேரடியாக தகுதி பெறும்.

இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்தைப் பிடிக்கும் அணிகள் வரும் நாளை மறுநாள் நடைபெற உள்ள எலிமினேட்டர் சுற்றில் வெற்றி பெற்றால் மட்டுமே இறுதிப்போட்டிக்கு முன்னேற முடியும்.

<<<<>>>>

நாடாளுமன்ற தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளதால் ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிகள் வெளிநாட்டுக்கு மாற்றப்படாது என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரிய செயலாளர் திரு. ஜெய் ஷா தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

பாரிஸ் ஒலிம்பிக் **Taekwando** ஆசிய தகுதிச் சுற்றுப் போட்டியில் இந்தியாவின் **Aman Kumar** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

சீனாவின் **Taian-**ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் 67 கிலோ எடைப்பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், ஐக்கிய அரபு எமிரேட்டின் **Ghloum**-ஐ வென்றார்.

**<<<<>>>>**

இந்தூர் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Shrivalli Rashmikaa Bhamidipaty** இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

**<<<<The End>>>>**